பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 03 | புதன்கிழமை | 20.09.2023 | அதிர்வு 50

# திருமலையில் படகு கவிழ்ந்து இளைஞர் சாவு

திருகோணமலையில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குச்சவெளி பொலிஸ் 04


# புலனாய்வுப் பிரிவுகள் வீழ்ச்சியடைந்துள்ளனவா? அடாவடிக்கு ஆட்சியாளர் துணைபோகின்றனரா?

## திறமையான புலனாய்வாளர்களை வழங்க நாங்கள் தயார் நாடாளுமன்றில் கூட்டமைப்பு எம்.பி. சார்ள்ஸ் தெரிவிப்பு

"நாட்டின் பொதுமக்களுக்கும் பாதுகாப்பில்லை மக்கள் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பில்லை. புலனாய்வுப் பிரிவினர் பலவீனமடைந்து விட்டார்கள் என்றால் திறமையான புலனாய்வாளர்களை வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே 02



# திலீபன் நினைவேந்தலுக்கு எதிராக வடக்கு, கிழக்கில் தடை வேண்டுமாம்

## சிங்களவர் கைகட்டி வேடிக்கை பார்க்கமாட்டார்கள் இப்படிக் கொக்கரிக்கின்றது ராஜபக்ஷக்களின் கட்சி



- சுடர் திலீபன் -

"திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எதிராகக் கொழும்பில் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கிலும் நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். இல்லையேல் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் வன்முறைகள் வெடித்து இன நல்லிணக்கமும், மத நல்லிணக்கமும் சீர்குலையும்." 02

# யாழில் திலீபன் ஊர்திக்கு தடை உத்தரவு கோரி மனு

## முன்னணியினருக்கு நீதிமன்றம் கட்டளை

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் செயற்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு கட்டளை ஒன்றை அனுப்பியுள்ளது.

இக்கட்டளையில், தங்களால் மேற்கொள்ளப்படும் நினைவு ஊர்திப் பவனியைத் தடை செய்யுமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். 02

# ஐ.நா. பொதுச் சபையின் 78ஆவது அமர்வு ஆரம்பம்

## ரணில் உள்ளிட்ட அரச தலைவர்களை வரவேற்றார் ஐ.நா. பொதுச்செயலாளர்



நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரச தலைவர்களை ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம் 02

# பங்களாதேஷ் பிரதமரை நேரில் சந்தித்தார் ரணில்

## சமந்தா பவருடனும் பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நேற்று சந்தித்தார்.

இரு தலைவர்களும் பயனுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவனத்தின் நிர்வாகி சமந்தா பவரையும் ஜனாதிபதி சந்தித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# இரகசியம்



தியாகி திலீபனின் ஊர்தி மீது திருகோணமலை கப்பல் துறையில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதலின் போது செல்வராஜா கஜேந்திரன் எம்.பியும் நையப்புடைக்கப்பட்டார்.

திலீபனின் ஊர்தி மீதான தாக்குதல் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் 03

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விவாதத்துக்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் முக்கிய இரு கலந்துரையாடல்கள்

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்துக்கு முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முக்கிய இரண்டு கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

அந்தவகையில், ஆளும் கட்சி உறுப்பினர்களின் விசேட குழுக் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் குழு அறை இலக்கம் 01 நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் இருப்பதால், பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதற்காக அரச தரப்பு அமைச்சர்களின் பிரசன்னம் கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் ஆளுங்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

விவாதத்தில் பின்பற்ற வேண்டிய விடயங்கள், வெளிப்படுத்தப்பட வேண்டிய கருத்துக்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் மற்றுமொரு விசேட கலந்துரையாடலும் நேற்று மாலை நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

குற்றப் புலனாய்வு திணைக்களம், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு அமைய நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் எந்தவித அரசியலும் இன்றி முழுமையான உண்மையைக் கண்டறிவதே தமது ஒரே நோக்கம் என இந்தக் கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

## புலனாய்வுப் பிரிவுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டின் இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுகள் வீழ்ச் சியடைந்துள்ளனவா? அல்லது ஆட்சியாளர்கள் அடாவடிகளுக்குத் துணைபோகின்றார்களா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

கடந்த 17ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தியாக தீபம் திலீபனின் ஊர்தியில் செல்லும்போது பொலிஸ், இராணுவப் புலனாய்வாளர்கள் முன்னிலையில் சிலரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மிகவும் கொடூரமாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவ்விடத்தில் இருந்த பொலிஸார், இராணுவத்தினர் ஏன் இந்தத் தாக்குதலைத் தடுக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. இது தொடர்பில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

இது தொடர்பில் கண்டனங்கள் உள்ளன. இதனைப் பொதுமக்களின் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்கின்றேன். இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். இல்லையேல் இதன் தொடர்ச்சி மிகவும் மோசமாக இருக்கும். இன்னும் தாக்குதல்கள் அதிகரிக்கும்.

பொதுமக்களின் பாதுகாப்பு தற்போது பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பகிரங்கமாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

பொது மக்களுக்கும் பாதுகாப்பில்லை, மக்கள் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பில்லை. அனுராதபுரம் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக்க பிரேமரத்னவை இலக்குவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அதனை யார் நடத்தினர், அவர்களிடம் துப்பாக்கி எப்படி வந்தது போன்ற கேள்விக்கு பொலிஸ் பாதுகாப்பு அமைச்சர் பதிலளிக்க வேண்டும்.

இலங்கையின் புலனாய்வுத்துறை வீழ்ச்சியடைந்திருக்க வேண்டும் அல்லது ஆட்சியாளர்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்குத் துணைபோக வேண்டும். இதில் ஒன்றுதான் சரியாக இருக்க வேண்டும்.

உங்களிடம் புலனாய்வாளர்கள் இல்லையென்றால் புலனாய்வாளர்களை உங்களுக்குத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். மிகவும் திறமையானவர்கள் உள்ளனர். இரண்டு, மூன்று நாள்களில் இந்த விடயத்தை யார், எதற்காகச் செய்தனர் என்பதனைக் கண்டறியும் புலனாய்வாளர்கள் உள்ளனர்.

எவ்வாறாயினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து சபாநாயகர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் எங்கள் மீதும் துப்பாக்கிச் சூட்டை நடத்தி நாங்கள் இறந்தால் அதைக் கண்டுபிடிக்க முடியாத நிலையே உள்ளது.

இதேவேளை, கடந்த ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி மன்னார் பகுதியில் விவசாய நடவடிக்கைக்குச் சென்று வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர். ஆனால், இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்று தெரிந்தும் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தத் துப்பாக்கி யாருடையது? ஏன் இந்த விசாரணையை ஆட்சியாளர்கள் தாமதப்படுத்த வேண்டும்?

அரசியல் பண பலம் படைத்தவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? அதற்கு உடந்தையாக இருப்பவர்கள் யார்? குற்றச்செயல்களைத் தடுக்கவிட்டால் பாதுகாப்புத் தரப்பு மீது மக்கள் நம்பிக்கைகொள்ள மாட்டார்கள். அது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.” - என்றார்.

## யாழில் திலீபன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டை நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

எனவே, தங்கள் தரப்பு வாதத்தை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ மேற்கொள்ள இன்று முற்பகல் 09.30 மணிக்கு மன்றில் தோன்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் நல்லூர் வரையான தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்திப் பயணம் பொத்துவிலில் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமானது.

இந்த ஊர்தி மீது திருகோணமலையில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை வவுனியாவை ஊர்தி வந்தடைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் மாலை சேதமாக்கப்பட்ட ஊர்தியுடன் புதிய ஊர்தி தயாரிக்கப்பட்டு மாங்குளத்திலிருந்து கிளிநொச்சி வரை ஊர்தி பயணித்திருந்தது.

இந்தநிலையில் நேற்று தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்திப் பவனி வட்டக்கச்சி, கிளிநொச்சி பொதுச் சந்தை, செல்வா நகர், கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் ஊடாக ஜெயந்தி நகர் சென்று மீண்டும் கிளிநொச்சியை வந்தடைந்தது.

அதைத் தொடர்ந்து கிளிநொச்சியிலிருந்து பரந்தன் ஊடாக புதுக்குடியிருப்புக்கு சென்று அங்கிருந்து முள்ளிவாய்க்கால் சென்ற ஊர்தி முள்ளிவாய்க்கால் தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கொக்குத்தொடுவாய் ஊடாக முல்லைத்தீவு நகரைச் சென்றடைந்தது.

இதன்போது பெரும்பாலான மக்கள் தியாக தீபம் திலீபனின் ஊர்திக்கு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## திலீபன் நினைவேந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இப்படிக் கூறியுள்ளது ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

“என்னதான் தியாகத்தைத் திலீபன் செய்தாலும் அவர் ஓர் பயங்கரவாதி. அவரைக் கொழும்பில் நினைவேந்த நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன. அதேபோல் மூவின மக்களின் ஒற்றுமையைக் கருதி வடக்கு, கிழக்கில் உள்ள நீதிமன்றங்களும் திலீபனை நினைவேந்தும் நிகழ்வுகளுக்குத் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட அனைத்து நினைவேந்தல் நிகழ்வுகளுக்கும் நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

சிங்கள மக்கள் மீண்டுமொரு வன்முறையை விரும்பவில்லை போரை விரும்பவில்லை. தமிழ் அரசியல்வாதிகள்தான் சிங்கள மக்களைச் சீண்டும் வகையில் செயற்படுகின்றார்கள். அப்படி அவர்கள் செயற்படும்போது சிங்கள மக்கள் கைகட்டி வேடிக்கை பார்க்கமாட்டார்கள்.” - என்றார்.

## ஐ.நா. பொதுச் சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அன்டோனியோ குட்டரெஸ் வரவேற்றார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78ஆவது அமர்வின் பொது விவாதம் நேற்று மாலை ஆரம்பமானது.

இந்த அமர்வில் நாளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார்.

# கிழக்கு ஆளுநரை பதவி நீக்கக் கோரி கையெழுத்து வேட்டை நேற்று ஆரம்பம்

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு எதிராக ஒரு லட்சம் கையெழுத்துக்களைத் திரட்டும் நடவடிக்கை ஐக்கிய சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக நேற்று காலை முதல் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

திருகோணமலை, நிலாவெளி – பெரிய குளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்துக்கு முன்பாகப் பௌத்த பிக்குகள் கடந்த 28ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த விகாரையை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்சினை தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டது.



"திருகோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறான தொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக செயற்படுவீர்கள்" – என்று ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது தெரிவித்திருந்தார்.

பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்தவொரு கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில், ஆளுநரைப் பதவி விலக்க வேண்டுமென வலியுறுத்தியே ஒரு லட்சம் கையெழுத்துக்களைத் திரட்டும் நடவடிக்கையை ஐக்கிய சங்கம் ஆரம்பித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தாலும், இந்தத் தாக்குதல் சம்பவத்தினால் அதில் பாதிக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கோ, அதன் எம்.பியான செல்வராஜா கஜேந்திரனுக்கோ தமிழ் மக்களின் அனுதாபமும் ஆதரவும் திரும்பியமை போன்ற தோற்றம் தென்படவேயில்லை. மாறாக, தமிழ் மக்கள் ஆங்காங்கே எரிச்சலுடன் முணுமுணுத்துத் திட்டுவதைத்தான் காண, கேட்க முடிகின்றது.

ஏதோ திலீபனின் நினைவு நிகழ்வில் தங்களைத் தவிர வேறு யாரும் பங்கு கொள்ளக்கூடாது என்ற எண்ணத்திலோ என்னவோ வேறு தமிழர் தரப்புகள் எதையும் அழைக்காமல், ஓரிரு டசின் ஆள்களோடு கிழக்கில் இருந்து வடக்குக்கு ஊர்திப் பவனி என்ற திருவிழாவை திடுதிப்பென ஆரம்பித்து, திலீபனைச் சந்திக்கு இழுத்து விட்டிருக்கும் சைக்கிள் கட்சி மீது பலருக்கும் கோபமோ கோபம். நியாயமானதுதான்.

ஊர்தி என்ற பெயரில் வாகனத்தில் திலீபனின் படத்துடன் ஒரு கட்டமைப்பை அமைத்து, துணைக்கு ஆள் கூட இல்லாமல், தனித்து அந்த ஊர்தியில் அமர்ந்து பயணம் பண்ணும் 'பவனி' ஓர் எம்.பிக்கு அவசியமா என்று ஓர் அன்பர் கேட்டார்.

"மற்றக் கட்சியினர், மற்றத் தரப்பினரை எல்லாம் அவர்கள் அழைக்க மாட்டார்கள். ஒரு கட்சிக்காரனைத் தொட்டால் தீட்டு. மற்றக் கட்சிக்காரனை முட்டினால் தோஷம். இன்னொரு கட்சிக்காரரை அழைத்தால் துடக்கு. இப்படி எல்லாம் கணக்குப் பார்ப்பவர்கள் அவர்கள். தாங்கள் மட்டும்தான் 24 கரட் சுத்தத் தங்கம். மற்றவர்கள் எல்லாம் வெறும் செம்புக் கலவை என்று எண்ணும் – தங்கள் கொள்கையும் அரசியல் போக்கும் செல்நெறியும்தான் சரியானவை, மற்றைய பாதைகள் எல்லாம் துரோகிகளின் போக்கு என்று சிந்திக்கும் – தனித்துவமான 'போராளிகள்'(?) அவர்கள். மற்றவர்களை அவர்கள் சேர்த்து, அரவணைத்து இத்தகைய நிகழ்வுகளை தமிழர் எழுச்சியாகக் கொண்டாட முற்பட்டால் தான் ஆச்சரியம்" – என்று அவருக்கு விளக்கினேன்.

1987 செப்ரெம்பரில் திலீபன் சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தபோது இவர்கள் பலரும் பாடசாலை மாணவர்களாகத்தான் இருந்தார்கள். திலீபன், கிட்டு, ரஹீம் என்று அந்த நேரத்தில் புலிகளின் யாழ் மாவட்ட போராளிகளோடு மிக அந்நியோன்னியமாகவும், நெருக்கமாகவும் பழகிய எங்களுக்கு இவர்கள் இப்போது பண்ணும் திருக்கூத்து எரிச்சலாக இருப்பது உண்மையே.

கடந்த வருடம் திலீபன் நினைவு நிகழ்வின் போது, தன்னுடைய காலத்தில் தம்பி திலீபனே மதித்த புலிகளின் மூத்த போராளியை இவர்கள் உதாசீனப்படுத்தி புறமொதுக்கும் அளவுக்கு நிலைமை போனமை கண்டு விசனித்தோம். வேறு என்ன செய்ய முடியும்?

திலீபன் தன்னைத்தானே தமிழினத் திற்காகத் தற்கொடையாக்கிய அந்த உணர்வெழுச்சிக் காலத்தில் இவர்களின் சைக்கிள் கட்சி எங்கிருந்தது, என்ன செய்து கொண்டு இருந்தது என்று சற்றுச் சிந்திப்பார்களேயானால் இப்படித் திலீபனின் தியாகத்தின் மீது தனித்துவப் பாத்தியம் கொண்டாடும் எண்ணம் கிஞ்சித்தும் அவர்களுக்கு வராது. தமது தரப்பை எண்ணி அவர்கள் தாங்களே வெட்கப்படுவார்கள் என்று நினைக்கிறேன்.

இது குறித்து இன்னும் பல விடயங்கள் எழுதலாம். ஆனாலும் காந்தி தேசத்துக்கு காந்தீயத்தை போதித்த அந்த உத்தமனின் நினைவை வைத்து, அரசியல் விவாதம் நடத்தி, சைக்கிள் கட்சி மட்டத்துக்கு இறங்க நான் விரும்பவில்லை. அதனால் என் பேனாவை அடக்கிக் கொள்கிறேன்.

ஆனாலும் திருகோணமலையில் இந்தச் சம்பவம் நடந்திருப்பதால், வாக்கு வேட்டைக்காக – மக்கள் ஆதரவு திரட்டலுக்காக – இப்படி உத்தமர்களின் நினைவைச் சந்திக்கு இழுக்கும் இன்னொரு சம்பவத்தை குறிப்பிடுவது தவிர்க்க முடியாததாகின்றது.

சைக்கிள்காரர்கள் இப்படிப் பண்ணும் திருகுதாளத்துக்கு முன்னுதாரணம் – வழிகாட்டல் – சம்பவம் உண்டு. இத்தகைய போக்கில் மலிவு அரசியல் மூலம் ஆதரவு திரட்டும் தந்திரத்தை சைக்கிளுக்கு முன்னர் நமது உதயசூரியனும் அதே திருகோணமலையில் செய்திருக்கின்றது. 18 வயது இளைஞனாக அதைப் பார்த்திருக்கிறேன்.

தேர்தல் அரசியலில் சம்பந்தனின் முதல் வெற்றிக்காக நடந்தேறிய அந்தத் திருவிளையாடல் பற்றிய விவரத்தை நாளை தருகிறேன்.

அதற்கும் சைக்கிள்காரர்களின் இப்போதைய சம்பவத்துக்கும் உள்ள ஒற்றுமையும் கூட நோக்கப்பட வேண்டியதே. அதனையும் நாளை பார்ப்போம்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விபரீத விவகாரம்

“நாட்டின் தற்போதுள்ள அரசியல் முறைமையினால் தான் என் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது. அதனால் இதில் மாற்றத்தை ஏற்படுத்தாத வரை இவ்வாறான சம்பவங்களைத் தடுக்க முடியாது.” - என்று நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

சரியான கருத்தை, சரியான இடத்தில் முன் வைத்தி ருக்கின்றார் அவர்.

நோயின் வெளிப்பாடான குணம் குறிகளுக்கு வைத்தியம் செய்வதை விட, நோய்க்குக் காரணமான மூலத்தைக் கண்டு, அதற்கு மருத்துவம் செய்வதுதான் சரியான சிகிச்சையாக இருக்க முடியும் என்று செந்நாப் போதகர் திருவள்ளுவரும் எடுத்துரைத்திருக்கின்றார்.

இப்போது ஓரிரு எம்.பிக்களுக்கு ஏற்பட்டுள்ள உயிரா பத்து நிலைமை, ஓராண்டுக்கு முன்னர் - அறகலய போராட்ட சமயத்தில் - நூற்றுக்கும் அதிகமான எம். பிக்கள் பதுங்கி ஒளிந்திருக்க வேண்டிய ஆபத்து நிலையை ஏற்படுத்திருந்தமையை நாம் மறந்து விட முடியாது.

அப்போதும் கூட, அந்த மக்கள் எழுச்சி - கிளர்ச்சி - சீற்றம் - கோபம் - எல்லாம் தனித்து ஓரிருவருக்கோ அல்லது எம்.பிக்கள் கூட்டத்துக்கோ எதிராக வெடித் ததாயினும், இலக்கு அந்தத் தனிப்பட்ட நபர்கள் அல்லர் என்ற தெளிதல் - புரிதல் - எல்லோருக்குமே இருந்தது.

சீற்றத்தின் உச்சியில் இருந்த மக்கள் கூட்டத்திற்கும் சரி, சீற்றத்துக்குள்ளான அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகார வர்க்கத்தினருக்கும் சரி, இது விடயத்தில் தெளிவான புரிதல் இருந்தது.

இலக்கும், சீற்றமும் தனிமனிதர்களுக்கு எதிரானவை அல்ல என்பதும், நாட்டின் தவறான ஆட்சி முறைமைக் கும், அந்தத் தவறான ஆட்சிமுறையின் கீழ் அதிகாரத்தை வைத்திருப்பவர்களுக்கும் எதிராகவே மக்களின் சீற்றம் கிளர்ந்து எழுந்திருந்தது என்பதும் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே தெரிந்தே இருந்தது.

அந்த மக்கள் கிளர்ச்சியின் பயனாக இடையில் வந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவி நிலை பேரதிர்ஷ்டமாகக் கிட்டியது.

அதனைக் கப்பெனப் பிடித்துக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கூட, எழுச்சி கொண்ட மக்களின் எதிர்பார்ப்பு, இங்கு முறைமை மாற்றமே என்பதும் நன்கு புரிந்தே இருந்தது. ஜனாதிபதி பதவியேற்ற ஆரம்ப காலத்தில் அவர் அது குறித்துப் பல தடவைகள் பிரஸ்தா பித்தும் இருந்தார்.

ஆனால் அறகலய போராட்டத்தை ஒட்டி வெடித்த மக்கள் கிளர்ச்சியின் உணர்வு நிலை அடங்கிப் போனதும், அல்லது தமது ஈவிரக்கமற்ற கெடுபிடி அணுகுமுறை யினால் அந்த உணர்வு நிலையை ரணில் விக்கிரமசிங்க இரும்புக் கரம் கொண்டு அடக்கி ஒதுக்கியதும், இந்த முறைமை மாற்றம் பற்றிய மக்களின் கருத்து நிலைப்பாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதல் கொண்டு அவரது ஆளும் கட்சியின் அமைச்சர்கள், எம்.பிக்கள், ரணி லின் கட்சியின் சார்பில் ஆட்சித் தரப்பில் அதிகாரம் செலுத்துவோர் வரை எல்லோர் மனதிலும் மறந்தே போய்விட்டது.

இப்போது துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அடுத்து, மறந்து போன அந்த விடயத்தை நினைவூட்டியிருக்கிறார் உத்திக பிரேமரத்ன எம்.பி.

இந்த விடயத்தை மறந்து - புறமொதுக்கி - உதாசீனப் படுத்தி - பொறுப்பற்று - நடந்து கொண்டால் விபரீத விலை கொடுக்க வேண்டி நேரும் என்பதை ரணில் உட் பட்ட ஆட்சித் தரப்பினர் புரிந்து கொண்டால் சரி.

## ஈஸ்டர் தாக்குதல் விடயம் பற்றி 21,22 ஆம் திகதிகளில் விவாதம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை, 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆகிய தினங்களில் விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக தாக்குதல் குறித்த விசாரணை களின் முன்னேற்றம் தொடர்பில் பாதுகாப்பு பிரிவினர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்றைய தினம் நீண்ட தெளிவுபடுத்தல் ஒன்றை மேற்கொண்டுள்ள னர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் தலைமை யில், பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவின் பிரதானி இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடயங்களை முன்வைத்துள்ளார்.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

## பயணப் பைக்குள் சடலம் 6 சந்தேக நபர்கள் கைது!

சீதுவ, தண்டுகம் ஓயாவுக்கு அருகில் கடந்த சனிக் கிழமை பயணப் பைக்குள் இருந்து சடலமொன்று கண்டெடுக் கப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர்கள் 6 பேர் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் கட்டான பிரதேசத்தைச் சேர்ந்த வர்கள் எனவும் அவர்களில் தந்தை மற்றும் அவரது இரண்டு மகன்களும் உள்ளடங்குகின்றனர் என சீதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீதுவ தண்டுகம் ஓயாவின் கரையில் கைவிடப்பட்ட நீல நிற பயணப் பைக்குள் இருந்து ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

அவர் சில நாள்களுக்கு முன்னரே இறந்துவிட்ட நிலை யில், அவரது சடலம் பின்னர் பயணப் பையில் அடைக்கப் பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர் 35 மற்றும் 40 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், உயிரிழந்தவரின் கழுத்தின் வலது பக்கத் தில் 07 நட்சத்திரக் குறிகள் கொண்ட பச்சை குத்தப்பட்டி ருப்பதாகவும், அவரது தலை மற்றும் கன்னம் ஆகிய இருபுறங்களிலும் காயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நீதவான் விசாரணையைத் தொடர்ந்து உயிரிழந் தவரின் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவுக்குட்பட்ட செந்தூர் பகுதியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று குச்சவெளி பொலி ஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த சுரேந்திரன் ஜனுஜன் (வயது 19) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

செந்தூர், மதுரங்குடா களப்புப் பகுதியில் மீன் பிடிப் பதற்காகப் படகு ஒன்றில் இரு இளைஞர்கள் சென்ற போது அந்தப் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மற்றவர் மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பொலிஸாரின் விசாரணையின் பின்னர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது




பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய, நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

முடெனைெ ளுயகநவல ஊழஅஅளைளழை எனப்படுகின்ற நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது, சில தொடர்பாடல்களை தடை செய்வது, தடை செய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலை கணக்குகள் மற்றும் போலி நிகழ்நிலை கணக்குகளை பயன்படுத்துவதை தடுப்பது உள்ளிட்ட சில விடயங்கள் இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த சட்டமூலத்தின் பிரகாரம், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐவர் அடங்கிய ஆணைக்குழுவொன்று பிரேரிக்கப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர்களது பதவிக்காலம் மூன்று வருடங்களாகும்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தகவல் தொழில்நுட்பவியல், சட்டம், ஆட்சி, சமூக சேவைகள், ஊடகவியல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அல்லது முகாமைத்துவ துறைகளின் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தடை செய்யப்பட்ட அறிக்கையால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, தடை செய்யப்பட்ட அறிக்கையை வெளியிட்ட நபர்களுக்கு அல்லது அவற்றுடன் தொடர்புடைய நபர்களுக்கு உத்தரவுகளை வழங்கவும் ஏதேனும் தடை செய்யப்பட்ட அறிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள், அத்தகைய தடை செய்யப்பட்ட அறிக்கையிடலுக்கு பதிலளிப்பதற்கான வாய்ப்பை வழங்குமாறு பணிப்புரை வழங்கவும் பொய்யான கூற்றுகளை அறிவிக்கின்ற நபர்களுக்கு அத்தகைய கூற்றுகள் அறிவிக்கப்படுவதை நிறுத்துமாறு அறிவுறுத்தவும், பணிப்புரை வழங்கவும் தடை செய்யப்பட்ட கூற்றொன்றைக் கொண்டுள்ள நிகழ்நிலை அமைவிடமொன்றுக்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பத்தை இல்லாமலாக்குவது அல்லது அத்தகைய நிகழ்நிலை அமைவிடத்தில் இருந்து தடை செய்யப்பட்ட கூற்றை அகற்றுவதற்கு எவரேனும் இணைய சேவை வழங்குநர்களுக்கு அல்லது இணைய இடையீட்டாளர்களுக்கு அறிவித்தல்களை வழங்கவும் நீதிமன்றத்தை அவமதிக்கும் அல்லது நீதித்துறையின் அதிகாரம் மற்றும் பக்கசார்பின்மையின் பேணுகைக்கு பாதகமாகவுள்ள எவையேனும் தொடர்பாடல்களை உகந்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழுவிற்கு எதிராக எவ்வித சிவில் அல்லது குற்றவியல் வழக்கொன்றைத் தொடுக்க முடியாதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இணையத்தளத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு செயற்பாடுகள் இந்த சட்டமூலத்தில் குற்றங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கைக்குள் இடம்பெறுகின்ற சம்பவங்கள் தொடர்பாக பொய்யான கூற்றுக்களை பகிர்தல், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலான பொய்யான அறிவிப்புகளை செய்தல், கலகத்தை ஏற்படுத்துவதற்காக பொய்யான கூற்றுகள் மூலம் அநாவசியமான முறையில் ஆத்திரமூட்டுதல், பொய்யான கூற்றொன்றின் மூலம் மதக்கூட்டம் ஒன்றைக் குழப்புதல், மத உணர்வுகளை புண்படுத்த வேண்டும் என்ற திடமான உள்நோக்கத்துடன் போலியான கூற்றுகளை பகிர்தல், மோசடி செய்தல், ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல், அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் உள்நோக்கத்துடன் பொய் கூற்றுகளின் மூலம் வேண்டுமென்றே நிந்தை செய்தல், கலகத்தை அல்லது அரசாங்கத்திற்கு எதிரான குற்றமொன்றை ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் பொய்யான அறிவிப்புகளை பரப்புதல், துன்புறுத்தல்களை மேற்கொள்வதற்கான சம்பவங்கள் தொடர்பான கூற்றுகளை தொடர்பாடல் செய்தல், சிறுவர் துஷ்பிரயோகம், தவறொன்றைச் செய்வதற்காக தன்னியக்கச் செய்நிரல்களை உருவாக்குதல் அல்லது மாற்றுதல், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையுடன் இணங்கி செயற்படத் தவறுதல் என்பன இந்த சட்டத்தின் கீழ் குற்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த சட்டத்தின் கீழ் தவறிழைக்கும் ஒருவருக்கு விளக்கமறியல் உத்தரவை பிறப்பிக்க, அபராதம் விதிக்க அல்லது குறித்த இரண்டு தண்டனைகளையும் ஒரே தடவையில் விதிக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிழையான அரசியல் முறைமையேதான் துப்பாக்கிப் பிரயோகத்துக்குக் காரணம்

## உத்திக பிரேமரத்ன எம்.பி. சபையில் தெரிவிப்பு



நாட்டின் தற்போதுள்ள அரசியல் முறைமையினால்தான் என் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதனால் இதில் மாற்றத்தை ஏற்படுத்தாத வரை இவ்வாறான சம்பவங்களைத் தடுக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

தன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து குறிப்படுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது உத்திக பிரேமரத்ன மேலும் தெரிவித்தவை வருமாறு:-

என் மீது கடந்த 17ஆம் திகதி இரவு மர்ம நபர்கள் சிலரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்தை யார் செய்தார்கள் என்பதை விட, தற்போதுள்ள முறைமையினால் தான் தாக்குதல் நடத்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன். இந்த முறைமை தவறு என்று நாம் அனைவரும் அறிவோம்.

இந்த முறைமை தவறு என்பது நம் நாட்டு மக்களுக்கும் தெரியும். அத்துடன் நமது நாட்டின் சமூக அமைப்புத் தவறாக உள்ளது. அரசியலும் தவறாக உள்ளது. அதனால்தான் நாடு இன்று இந்த நிலைக்கு வந்துள்ளது.

அதனால் இவ்வாறான சம்பவங்களை தடுப்பதாக இருந்தால் எமது முறைமையை மாற்றவேண்டும். முறைமாற்றம் ஏற்படுத்தாமல் ஒருபோதும் இவ்வாறான சம்பவங்களை தடுக்க முடியாது. - என்று தெரிவித்துள்ளார்.

# வவுனியா பல்கலையில் தமிழ் புறக்கணிப்பு நாடாளுமன்றத்தில் சாள்ஸ் எம்.பி.ஆதங்கம்



வவுனியா பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றத்தில் தனது ஆதங்கத்தை தெரிவித்தமையுடன் உயர் கல்வி அமைச்சரின் கவனத்திற்கும் அந்த விடயத்தைக் கொண்டு வந்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்விடயத்தை கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

வவுனியா பல்கலைக்கழகத்தில் வளப்பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுகின்றது. அதனை தீர்த்து வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதேவேளை, வவுனியா பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை வவுனியா மற்றும் வன்னி வாழ் மக்களுக்கு மனவேதனையான விடயமாக காணப்பட்டது. சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும் மாத்திரமே வரவேற்புப் பதாகை இடம் பெற்றிருந்தது. இது தமிழ் மக்கள் மத்தியில் மன வேதனையாகவும் ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் இருந்தது.

இதனை உயர்கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் ன் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இது போல் இனிவரும் காலங்களில் நடைபெறாது பார்த்துக் கொள்ள்ள வேண்டும். – எனவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த உயர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த –

வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதே வேளை தமிழ் மொழி புறக்கணிப்பு தொடர்பில் பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இவ்வாறு நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப் படும். – எனத் தெரிவித்தார்.

# கொழும்புத் துறைமுக நகரத்தின் உரிமத்தை ரணிலேதான் இலங்கைக்கு உரித்தாக்கினார்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சபையில் தெரிவிப்பு

மஹிந்த ராஜபக்ஷவினால் சீனாவுக்கு வழங்கப்பட்ட கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்தின் உரிமத்தை ரணில் விக்கிரமசிங்கவே 99 வருட காலத்துக்கு புதுப்பித்து, இலங்கைக்கு உரித்தாக்கினார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்த மானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்புத் துறைமுக நகரத்தின் செயற்பாடுகளை நல்லாட்சி அரசாங்கம் அரசியல் நோக்கத்துக்காக தாமதப்படுத்தியது என பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளமையைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில்தான் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்துக்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக உள்ள 50 ஏக்கர் நிலப்பரப்பை சீனாவுக்கு எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் உறுதிப்பத்திரம் ஊடாக வழங்கும் வகையில்தான் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை திருத்திக் கொள்வதற்காகவே துறைமுக அபிவிருத்தி நகர செயற்திட்டம் குறுகிய காலத்துக்கு இடை நிறுத்தப்பட்டது.

மஹிந்தச்ராஜபக்ஷவினால் சீனாவுக்கு முழுமையாக வழங்கிய கொழும்பு துறைமுக நகர வலயத்தை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 99 வருட கால ஒப்பந்த அடிப்படையில் திருத்தம் செய்தார்.



கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்தின் அபிவிருத்தி திட்டங்களை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டுக்கு கொண்டு வருகின்றார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. முன்னாள் நிதி மூலதனச் சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் நாட்டுக்கு அழைத்து வந்த முதலீட்டாளர் நிதி சலவைக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி வெளிநாட்டில் சிறை தண்டனைக்கு உள்ளாகியுள்ளார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஒட்டுமொத்த மக்களும் வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்துக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரத்துக்கு முன்பாக உள்ள சங்ரில்லா ஹோட்டல் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஹோட்டல்களுக்கு சடுதியாக வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் விசேட வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளமை எதிர்காலத்தில் வணிக நகர என்ற இலக்குக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும். – என்று தெரிவித்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கையை தாக்குதலில் ஈடுபட்டோரே மறைக்கின்றனர்

## எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றில் பகிரங்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை தாக்குதலில் ஈடுபட்டவர்களே மறைகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் இரண்டாம் தொகுதியின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பாகங்கள் பரிசீலனைக்காக எதிர்க்கட்சித் தலைவரால் கோரப்பட்ட போதிலும், அந்த கோரிக்கையை புறக்கணிக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளையே தற்போதைய அரசாங்கமும் நடைமுறைப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவருக்குக் கூட அந்த பகுதிகளை பரிசீலிக்க வாய்ப்பு வழங்காதுள்ளது. இதன்மூலம் எனது நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன.

பாரிய கொலைகளும் அனர்த்தங்களும் இடம்பெற்று, உயிர்கள் பலியாகி இன்றும் உண்மையான யதார்த்தத்தை நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் அறியாதுள்ளனர்.

அத்துடன், நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரிக்குள்ள உரிமையும் கூட மீறப்பட்டுள்ளது. நாடாளுமன்றச் செயலார் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் அந்த ஆவணங்களை அணுகலாம் என்று கூறுவது நியாயமற்றது.

தொடர்ந்தும் சாட்சியக் குறிப்புகள் மற்றும் சாட்சியங்களை மக்கள் பிரதிநிதிகளிடம் மறைக்காமல் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவதற்கு முன்பாக அந்த பகுதிகளை பரிசீலிப்



பதற்கும் பெற்றுக்கொள்ளவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்யாமல் மறைத்து விட்டால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட, கைகளில் இரத்தம் தோய்ந்தவர்கள் தான் இவ்வாறு மறைப்பவர்கள் என்று தெரிய வரும்.

கோட்டாபய அரசாங்கம் வழங்கிய கட்டளைகளை இந்த அரசாங்கமும் நடைமுறைப்படுத்துவது தவறு. இந்த அறிக்கைகள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மறைக்கக் கூடாது. – என்று தெரிவித்துள்ளார்.

# உத்திக பிரேமரத்ன எம்.பி. மீது துப்பாக்கிச்சூடு; புலனாய்வின் உதவியை நாடுகின்றது பொலிஸ்

கொழும்பு, செப் 20

நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை அடையாளம் காண பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரின் உதவியை நாடவுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பான விடயங்களை அநுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ முன்னிலையில் சமர்ப்பித்து, பொலிஸார் இதனை தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்து, துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த பாதுகாப்புப் பிரிவின் இரு அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெற்றுள்ளது என பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

# காணாமல் போன சிறுமியின் சடலத்தை மீளளித்தால் 20 லட்சம் ரூபா சன்மானம்

## இப்படிக் கூறுகின்றார் பேர்த்தியார்

– என். புவியரசன் –

வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் காணாமல் போன சிறுமியின் சடலத்தை மீள ஒப்படைத்தால் 20 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என சிறுமியின் அம்மம்மாவான குணரட்னம் ரோகினி தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று ஊடகவியலாளருக்கு கருத்துக் கூறிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பில் துண்டு பிரசுரம் ஒன்றும் அவரால் வெளியிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 25.08.2023 ஆம் திகதியன்று வவுனியா, பாரதிபுரம் பகுதியில் 2 வயது சிறுமி நீர்த் தொட்டியில் தவறி விழுந்து இறந்தார். இறந்த சிறுமியின் உடல் இராசேந்திரங்குளம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இருப்பினும் கடந்த 05.09.2023 அன்று சிறுமியின் உடல் இனந்தெரியாத நபர்களால் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உண்மையான தகவல் தெரிந்தவர்கள் கீழ்கண்ட தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் வழங்குபவர்களுக்கு 10 லட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும். சிறுமியின் சடலத்தை எடுத்தவர்கள் மீள கையளிக்கின்ற போது 20 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும். இதனை தாழ்மையாக கேட்கின்றேன். எங்களது பிள்ளையின் அங்கம் வேண்டும். – எனவும் குறித்த சிறுமியின் அம்மம்மா தெரிவித்துள்ளார்.

சிறுமியின் சடலம் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 0766091158 அல்லது 0754986953 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த சிறுமின் சடலத்தை காணவில்லை என நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புலிப் பயங்கரவாதியான கஜேந்திரனை கைது செய்து சிறையில் அடையுங்கள்!

## சீற்றத்துடன் விமல் வீரவன்ஸ எம்.பி. கோரிக்கை



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஒரு புலிப் பயங்கரவாதி என்றும் அவரை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

புலிப் பயங்கரவாத அமைப்பின் தலைவர்களில் ஒருவரான திலீபனை நினைவேந்தும் ஊர்தியைத் திருகோணமலையில் சிங்கள மக்கள் தாக்கிச் சேதப்படுத்தியமை நியாயமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்த ஊர்தியில் கஜேந்திரனும் பயணித்தபடியால்தான் அவரும் தாக்குதலுக்கு இலக்கானார் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, கஜேந்திரனும் ஒரு புலிப் பயங்கரவாதி என்பது சிங்கள மக்களுக்குத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



கடந்த பொதுத்தேர்தலில் வடக்குத் தமிழ் மக்கள் நிராகரித்த கஜேந்திரன், தேசியப்பட்டியல் ஊடாகவே நாடாளுமன்றம் வந்தார் என்றும் விமல் வீரவன்ஸ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை 'கோப்' குழுவின் முன் விசாரணை செய்யுங்கள்!

## எதிர்க்கட்சிகளின் கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தல்

கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை விளையாட்டுத்துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஒட்டுமொத்த மக்களும் கிரிக்கெட் விளையாட்டை கடுமையாக விமர்சிக்கிறார்கள். ஆகவே கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையைக் 'கோப்' குழுவுக்கு அழைத்து விசாரணை செய்யுங்கள் என எதிர்க்கட்சிகளின் பிரதமகொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் நிதி நிலைமை குறித்து கணக்காளர் நாயகம் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டின் தற்போதைய வீழ்ச்சி நிலையைச் சுட்டிக்காட்டி அண்மையில் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நடத்தினோம்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தொடர்பில் நாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஏற்றுக்கொண்டார். அத்துடன் கிரிக்கெட் தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நடத்தியதற்கு நன்றி தெரிவித்தார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மீது நாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை கணக்காளர் நாயகம் தனது இறுதி அறிக்கையில் உள்ளடக்கியுள்ளார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஏற்றுக்கொண்டமையால் அவரைப் பதவி விலகுமாறு ஆளும் தரப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் அழுத்தம் பிரயோகித்துள்ளார்கள்.

கிரிக்கெட் விளையாட்டை ஒட்டுமொத்த மக்களும் கடுமையாக விமர்சிக்கிறார்கள். அரசாங்கம் நாட்டை இல்லாதொழித்துள்ளதை போன்று கிரிக்கெட் விளையாட்டையும் சீரழித்துள்ளது. ஆகவே கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையை கோப் குழுவுக்கு அழைத்து விசாரணை செய்யுங்கள். - என்றார்.

# மேலும் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக வருகிறது நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## வியூகம் வகுக்கின்றது எதிரணி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மேலும் இரு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது தொடர்பில் எதிரணிகள் கலந்துரையாடி வருகின்றன.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஆகிய இருவருக்கு எதிராகவே தனித்தனியாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இவ்விரு அமைச்சுகளும் விவசாயிகள் உட்பட மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்துவரும் நிலையில், தேசிய சொத்து விற்பனை, முறையற்ற தீர்மானங்கள், விலைமனுகோரலில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் மோசடி உள்ளிட்ட காரணங்களை மையப்படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சருக்கு எதிராக அண்மையில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் சாதாரண பெரும்பான்மையை (113) தக்கவைத்துக் கொள்ளவே கடுமையாகப் போராட வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது.

எனவே, பிரேரணைகளை வெற்றிபெற வைப்பதைவிடவும் அரசுமீது மக்களுக்கு உள்ள அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக தொடர்ச்சியாக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவரும் முனைப்பில் எதிர்க்கட்சி ஈடுபட்டுள்ளதால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அரசதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பு தொடர்பில் விரைவில் பரீட்சை ஆணையாளரின் அறிக்கை

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர் தர பரீட்சையை ஒத்திவைப்பதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் பிரேரணைகளை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கவனத்துக்கு கொண்டுவந்திருக்கிறோம். மிக விரைவில் அது தொடர்பாக ஆணையாளர் அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி கவிரத்ன கூறுகையில் –

பரீட்சைகள் கால அட்டவணையில் மறுசீரமைப்புகளை கொண்டு வர வேண்டும். பிள்ளைகளின் உரிமைகளை இல்லாமல் செய்யக் கூடாது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட கஷ்ட பிரதேச சில பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளின் இன்னும் பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.

அத்துடன் 2023 ஆம் ஆண்டில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இரண்டரை வருட உயர்தர வகுப்பில் கற்கும் காலமும் கிடைக்கவில்லை. நவம்பர் மாதத்தில் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கும் போது, ஆசிரியர்கள் குறுகிய காலத்தில் பாடங்களை முடிக்கவே முயற்சிப்பர். அதனால் மாணவர்கள் அநீதி இழைக்கப்படுகிறது.

அதேபோன்று இரண்டாவது முறையாகப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள், பாடப் பிரிவுகளை மாற்றும் மாணவர்களுக்கு பரீட்சைக்குத் தயாராக போதுமான காலம் இல்லை. இதனால் நவம்பர் 27 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பரீட்சையை நடத்தாது, பாடசாலை மூன்றாம் தவணை காலத்தை ஜனவரி 19 ஆம் திகதியுடன் நிறைவு செய்து உயர்தரப் பரீட்சையை ஜனவரி 22 முதல் பெப்ரவரி 17 வரையில் நடத்த முடியும். அப்போது பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் பாடசாலை முதலாம் தவணையை ஆரம்பிக்க முடியும்.

அதேபோன்று மே மாதத்தில் பெறுபேற்றை வழங்கவும் முடியுமாக இருக்கும். அவ்வாறு செய்தால் அடுத்த வருடத்தின் பரீட்சையை ஒக்டோபரில் நடத்தவும் முடியுமாக இருக்கும். இதனால் பரீட்சையை ஜனவரி 22 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்க முடியுமானால் அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்று தெரிவித்தார்.



இதன்போது சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறுகையில் –

உயர்தரப் பரீட்சையில் தோற்றும் ஒரு லட்சம் வரையிலான மாணவர்கள் ஒரே குழுவாக இருந்து இந்த வேலைத்திட்டத்திற்கு உறுதியாக இருக்கின்றனர்.

குறிப்பாக 2010 ஆம் ஆண்டு முதல் எடுத்துக்கொண்டால் இந்தப் பரீட்சைக்காக அதிகளவான காலம் வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் 219 நாள்கள் வழங்கப்பட்டுள்ளன. 2021 இல் 141 நாள்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் 2023இல் 84 நாள்களே வழங்கப்பட்டுள்ளன. இது அநீதியானது. – என்று குறிப்பிட்டார்.

இதன்போது எழுந்த எதிரணி சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க கூறுகையில் –

இது ஒரு லட்சம் மாணவர்களுடன் தொடர்புடைய பிரச்சினை. இது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும். இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள், பரீட்சைகள் ஆணையாளரை அழைத்து இது குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும். – என்று தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறுகையில் –

உயர்தரப் பரீட்சையை பிற்போடுவதற்கு ரோஹினி கவிரத்ன எம்.பி.யோசனையொன்றை விடுத்துள்ளார். அந்த யோசனை பரீட்சைகள் ஆணையாளரின் அவதானத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அவர் விரைவில் அறிவிப்பொன்றை வெளியிடுவார். – என்று தெரிவித்தார்.

# திருகோணமலையில் நேற்று திலீபனின் நினைவு நிகழ்வு

திருகோணமலை சிவன் கோவிலடியில் முன்னெடுக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவுகூரலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் திருகோணமலை வாழ் மக்கள் ஒன்றிணைந்து சுடர் ஏற்றி உருவப்படத்திற்கு மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வு நேற்று திருகோணமலை சிவன்கோயில் முன்றிலில் நடைபெற்றது.

"நினைவேந்தல் உரிமை என்பது அனைத்து மக்களுக்கும் உரித்தான ஒன்று. அதனை மறுத்து மூர்க்கத்தனமாக மேற்கொள்ளப்பட்ட இனவெறித்தாக்குதலானது சமூகங்களுக்கு இடையில் இன விரிசலை ஏற்படுத்த இந்த அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒன்று" – என



செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

மேலும் அரச இராணுவ ஒத்துழைப்புடன் புலனாய்வுத் துறையினராலேயே மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே இதனை தாம் பார்க்கின்றனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமிழ், முஸ்லிம்களது உரிமைக்காகவே தியாகி திலிபன் அகிம்சை முறையில் போராடினார் எனவும், அது பிற்போக்கில் அரசினால் பிரிவினை வாதமாக மாற்றப்பட்ட நிலையில் தற்போதும் இந்த அரசானது அந்தப் பிரிவினை வாத அடக்குமுறைக்கு ஏற்றவாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சாய்ந்தமருதில் கடலரிப்பைத் தடுத்தல்; கொழும்பில் இன்று உயர் மட்ட ஆராய்வு

(நூருல் ஹுதா உமர்)




திங்களன்று சாய்ந்தமருது அல் ஹசனாத் பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அரச உயர்மட்டங்களைத் தொடர்பு கொண்டு கடலரிப்பின் அகோரம் தொடர்பில் விளக்கிக் கடலரிப்பைத் தடுப்பது தொடர்பில் உள்ள அவசர நிலையை எடுத்துக் கூறி முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இன்று காலை நகர திட்டமிடல் அமைச்சில் சாய்ந்தமருது கடலரிப்பை தடுப்பது தொடர்பான உயரமட்ட கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நகர திட்டமிடல் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜங்க அமைச்சர் அருந்திக பெர்ணாண்டோ, ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் அமைச்சருமான நிமால் லான்ஸா, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ், கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள், சாய்ந்தமருது பிரதேச செயலாளர், சாய்ந்தமருது அரசியல் பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.



# கனடா - இந்தியா உறவில் பதற்றம்: தூதரக அதிகாரிகள் வெளியேற்றம்!



கனடாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவில் பதற்றம் அதிகரித்துள்ளது.

கனடாவை சேர்ந்த சீக்கிய தலைவரான ஹர்தீப் சிங் நிஜார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில், இந்திய அரசு இருக்கலாம் என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்ததையடுத்து இந்த நிலை தோன்றியுள்ளது.

மேலும், இந்திய தூதரக அதிகாரி ஒருவரையும் கனடா வெளியேற்றியுள்ளது.

எவ்வாறாயினும், கனடாவின் இந்த குற்றச்சாட்டை இந்திய அரசாங்கம் மறுத்துள்ளது. கனேடிய தூதரக அதிகாரி நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனவும் இந்தியா உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என காலிஸ்தான் குழுவினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இதனை வலியுறுத்தி கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவிற்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவதுடன், இந்திய தூதரகம் முன்பு, கடந்த மார்ச் மாதம் அவர்கள் போராட்டம் நடத்தினர்.

காலிஸ்தான் குழுவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கனடாவிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்த நிலையில், கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப்பிரிவின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத்தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என கூறி கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் புகைப்படங்களுடன் போஸ்டர் ஒட்டினர்.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்திய அரசாங்க முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலைக்கும் நம்பகமான தொடர்பு இருப்பதை கனடா உளவுத்துறை கண்டுபிடித்துள்ளது என கூறினார்.

கனடா மண்ணில் ஒரு கனேடிய குடிமகன் கொல்லப்பட்டதன் பின்னணியில் எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கத்தின் தலையீடும் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அது தங்கள் நாட்டின் இறையாண்மையை மீறும் செயல் எனவும் ஜஸ்டின் ட்ரூடோ குறிப்பிட்டார்.

ஆனால், நிஜார் கொலையில் தங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என இந்தியா மறுத்துவிட்டது.

கனடாவின் வான்கூவர் நகருக்கு கிழக்கே 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சர்ரே என்ற ஊரிலுள்ள குருநானக் சீக்கிய குருத்வாராவின் கார் நிறுத்துமிடத்தில் வைத்து கடந்த ஜூன் மாதத்தில் நிஜார் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முகமூடி அணிந்த இரண்டு துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச்சென்றனர்.

பிரிவினைவாத போராளிக் குழுவுக்கு தலைமை தாங்கிய ஒரு பயங்கரவாதி என்று நிஜார் குறித்து இந்தியா முன்பு விபரித்திருந்தது.

ஆனால், அவரது ஆதரவாளர்கள் இந்தியாவின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று தெரிவித்துள்ளனர்.

# விஜய் ஆண்டனியின் மகளின் உருக்கமான கடிதம் மீட்பு!



பிரபல இசையமைப்பாளரும், நடிகருமான விஜய் ஆண்டனியின் மகளான மீரா நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மீராவின் உடல் சென்னை – ஓமந்தூரார் மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பின்னர் பிரேத பரிசோதனை முடிவடைந்து அவரது பெற்றோர் விஜய் ஆண்டனி – பாத்திமாவிடம் உடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவரது உடலானது டி.டி.கே சாலையில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இந்தநிலையில், மீராவின் மரணம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது ஒரு கடிதம் கிடைத்துள்ளது. அந்த கடிதத்தில் 'ஐ லவ்யூ ஓல். மிஸ் யூ ஓல்' என்று எழுதப்பட்டுள்ளது என செய்திகள் வெளியிட்டுள்ளன.

மேலும், பத்து வரிகள் கொண்ட அந்த கடிதம் முழுவதும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது என்றும் இந்த கடிதம் மீரா மன அழுத்தத்தில் இருந்தபோது எழுதியதா? அல்லது தற்கொலை செய்யும் முன்பு எழுதியதா? என்பது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# பேருந்து விபத்து: 8 பேர் பலி!

இந்தியாவின் – பஞ்சாப் மாநிலத்தில் இடம்பெற்ற பேருந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தின் சிர்ஹிந்த் ஃபீடர் கால்வாயில் பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து இடம்பெறும் போது, பேருந்தில் சுமார் 35 பேர் வரை பயணித்துள்ளனர்.

குறித்த பகுதியில் தொடர்ந்தும் பெய்து வரும் கனமழை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இந்த சம்பவத்தில் காயமடைந்த நபர்கள் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# அமெரிக்காவில் காணாமல்போன எவ்.35 போர் விமா-

அமெரிக்கா தனது எவ்.35 பி என்ற அதி நவீன தாக்குதல் போர் விமானத்தை காணவில்லை என்று அறிவித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய விமானப் படையான அமெரிக்காவின் 80 மில்லியன் டொலர் மதிப்புடைய விமானமே இவ்வாறு திடீரென காணாமல்போயுள்ளது.

இந்த விமானத்தின் இருப்பிடத்தை அறிந்துகொள்ள முடியாமல் இராணுவத்தினர் திணறி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

தென் கரோலினா கடலோரம் இந்த விமானம் சென்ற போது தொடர்பு அறுந்து மாயமாகியுள்ளது.

இதேவேளை, விமானம் ஓட்டோ மோடில் இருந்ததாகவும் விமானி பாராசூட் மூலம் குதித்து விட்டார் என்றும் கூறப்படுகின்றது.

# பெரு நாட்டில் விபத்து: 24 பேர் உயிரிழப்பு!



பெரு நாட்டில் நேற்று இடம்பெற்ற பேருந்து விபத்தில் 24 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெரு நாட்டின் அயகுச்சோவா பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் பயணித்த பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில், பேருந்தில் பயணித்த 24 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அத்துடன், பலர் படுகாயமடைந் துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சோமாலியாவுக்கான உதவிகளை இடைநிறுத்தியது ஐரோப்பிய ஒன்றியம்

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சோமாலியாவுக்கான உதவியை, ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

கடுமையான பஞ்சத்தை தவிர்க்கும் வகையில் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட உதவிகளை, சோமாலிய அதிகாரிகள் மோசடி செய்துள்ளமை ஐக்கிய நாடுகளின் விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து சோமாலியாவுக்கான உதவியினை ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்தின் சிரேஸ்ட அதிகாரிகள் இருவர் தெரிவித்துள்ளனர் .

# பேருந்து விபத்து: 20 பேர் பலி





தென்னாப்பிரிக்காவில் பேருந்து ஒன்றும் பாரவூர்தியொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வைரச் சுரங்க அகழ்வு பணிகளுக்காக தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்றும் பாரவூர்தியொன்றுமே இவ்வாறு மோதுண்டுள்ளன.

பாரவூர்தியின் சாரதி கவனக் குறைவாக வாகனத்தை செலுத்தியமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து சம்பவத்தில் மேலும் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

# உலக வங்கியின் தலைவரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா ஆகியோருக்கு இடையில் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு முழுமையான ஆதரவு வழங்குவோம் என உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா இதன்போது தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள இந்த செயற்றிட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றால் இலங்கை எதிர்பார்க்கும் இலக்குகளை விரைவாக அடைய முடியுமென அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த 2 வருடங்களில் இலங்கை எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உலக வங்கி வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலக வங்கியின் தலைவருக்கு இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை முழுமையான பொருளாதார மறுசீரமைப்பு பாதையில் பிரவேசித்துள்ளது எனவும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டமும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அடுத்த தசாப்தத்தில் அதிக பொருளாதார வளர்ச்சி வேகத்துடன், நாடு முழுமையாக இயல்பு நிலைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக சர்வதேச நாணய நிதியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்புகளை முழுமையாக அமுல்படுத்த எதிர்பார்த்திருக்கிறோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் சர்வதேச நடவடிக்கைகளுக்கான தலைவர் இலங்கைக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதியில் விஜயம் செய்யவுள்ளேன் என்று உலக வங்கியின் தலைவர் இதன்போது கூறியுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை உலக வங்கியின் தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# ஜெனிவா அமர்வின் பிரசாரக் களத்தில் ‘சனல் 4’ தொலைக்காட்சிக் குழுவினர்

“சனல் 4“ தொலைக்காட்சியின் தலைவர் மற்றும் அந்த ஊடகத்தின் ஒரு குழுவினர் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் பேரவையில் கூட்டத்தொடர்களில் கலந்து கொள்ள சென்றுள்ளனர் எனப் பிரபல சமூக ஆர்வலர் ஷெஹான் மலேகா கமகே தெரிவித்தார்.

சனல் 4 குழுவினர் இந்த கூட்டத் தொடருக்கு இணையாக நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொண்டு குண்டுத் தாக்குதல்கள் குறித்த தகவல்களை இராஜ தந்திரிகளுக்கு வெளிப்படுத்தக் கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது அமர்வு ஜெனிவாவில் நடைபெற்று வருகிறது.

இந்த அமர்வில் இலங்கையில் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட ஆவணப்படம் மீண்டும் இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளதுடன், உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ள பின்புலத்தில் சனல் 4 குழுவினர் இவ்வாறு ஜெனீவா சென்றுள்ளனர்.

சனல் 4 குழுவினர் இந்த வாரத்தில், இது தொடர்பான சர்ச்சைக்குரிய ஆவணப்படம், ஆதாரங்கள், உண்மைகள் மற்றும் ஏனைய தகவல்களை உலகின் அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகளுக்கும் வழங்குவார்கள் எனத் தெரியவருகிறது.

சனல் 4 குழுவின் கலந்துகொள்ளும் கூட்டங்களில் பல நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர் எனக் கூறப்படுகிறது. அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்துள்ள சிலருக்கு இந்த ஆவணப்படம் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.






# புஸ்ஸல்லாவ விபத்தில் அறுவருக்குப் படுகாயம்

படல்கும்புர – பதுளை பிரதான வீதியில் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பயணிகள் பஸ் ஒன்றும் பவுஸரும் மோதியதில் அறுவர் காயமடைந்துள்ளனர்.

படல்கும்புர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, பஸ்ஸில் பயணித்த நான்கு பயணிகளும் விபத்தில் சிக்கிய இரு வாகனங்களின் சாரதிகளுமாக காயமடைந்த ஆறு பேர் மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.



# வீதியில் மனிதர்கள் சுட்டுக்கொலை; சிக்காகோ நிலைமை இலங்கையில்!

## தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றில் விசனம்

அமெரிக்காவின் சிக்காகோவில் வீதியில் மனிதர்களைச் சுட்டுக்கொல்லும் நிலைமை போல் இலங்கையின் நிலைமை மாறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வர வேண்டுமாயின் நாட்டின் அமைதியும் சகவாழ்வு இருக்க வேண்டும். வீதி நெடுகிலும் ஐஸ் போதைப் பொருள் விற்பனை செய்யும் நிலைமையேற்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ள மிகப் பெரிய போதைப் பொருள் கடத்தல்காரர்கள், இலங்கையில் கொலை செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியலை அனுப்பி, கொலைகளை செய்கின்றனர்.

இலங்கை மத்திய வங்கி கொத்தலாவவின் கோல்டன் கீ நிறுவனம் போல் மாறியுள்ளது.

ஒரு புறம் வங்குரோத்து அடைந்து கடனை செலுத்த முடியாத நாடாக இலங்கை மாறியுள்ளமையுடன் அமைதியும் சகவாழ்வும் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.




# 'கோப்' குழுவின் விசாரணைக்கு 6 அரச நிறுவனங்கள் அழைப்பு

ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்வதற்காக 06 அரச நிறுவனங்கள் எதிர்வரும் நாள்களில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு என அழைக்கப்படும் 'கோப்' குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளன.

இலங்கை தேயிலைச் சபை, கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம், கொழும்பு பல்கலைக்கழகம், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், எல்கடுவ பிளான்டேசன் போன்ற அரச நிறுவனங்களே கோப் குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளன.

இலங்கை தேயிலைச் சபை நேற்று அழைக்கப்பட்டிருந்தது. கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தை இன்று முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எதிர்வரும் 3ஆம் திகதி 'கோப்' குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளது.



# 25ஆம் திகதி தொடக்கம் இரண்டு வாரங்கள் யாழில் நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்றிட்டம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக பிரடனப்படுத்தியுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் தாம் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்.மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் பூரண கட்டுப்பாட்டில் இருக்கின்றது. ஆனால் தற்போது ஆரம்பித்திருக்கின்ற வடக்குக் கிழக்கு பருவப்பெயர்ச்சி மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்த பின்னர் ஒக்டோபர், நவம்பர் டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய ஐந்து மாதங்களில் டெங்கு நோயின் பரவல் அதிகமாக இருக்கும்.

இந்த வருடத்தைப் பொறுத்த வரையில் இன்று வரையில் யாழ் மாவட்டத்தில் 1,836 நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். இதில் ஓர் இறப்பும் ஏற்பட்டிருக்கின்றது, இந்த வருடத்தில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய நான்கு மாதங்களில் அதிகமான நோயாளர்கள் இனங்காணப்பட்டு இருந்தார்கள். பின்னர் ஜூன், ஜூலை,



ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் ஏறத்தாழ 120, 130 நோயாளர்கள் தான் இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். தற்போதைய சூழ்நிலையில் இந்த நோய் இங்கு கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,460 நோயாளர்கள் இனங்காணப்பட்டமையுடன் 10 இறப்புகளும் இடம்பெற்றிருந்தன. எனவே கடந்த வருடத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் குறைவாகவே காணப்படுகிறது.

எனவே இந்த வடக்கு, கிழக்கு பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்து இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் காலங்களில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரடனப்படுத்தி இருக்கின்றோம். அதனை ஒருங்கிணைக்கின்ற வகையிலே மாவட்ட மட்டத்தில் கடந்த 15 ஆம் திகதி யாழ் மாவட்டம் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் டெங்கு தடுப்பு செயலணி கூட்டம் இடம்பெற்று இருந்தது. இந்தக் கூட்டத்தின் போதே இந்த இரண்டு வாரங்களையும் டெங்கு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்துவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இந்த வாரத்தில் பிரதேச மட்ட டெங்கு தடுப்புச் செயலணிக் கூட்டங்கள் பிரதேச செயலாளர்கள் தலைமையில் இடம்பெறும். இந்தக் கூட்டத்தின் போது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் எவ்வாறு இந்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது பற்றி தீர்மானிக்கப்படும். இதற்கு அடுத்த கட்டமாக இந்த வாரத்திலே கிராமிய மட்ட டெங்கு தடுப்பு செயலணி கூட்டங்கள் இடம் பெற்று கிராம மட்டத்தில் எவ்வாறு இதனை கட்டுப்படுத்துவது என்பது பற்றி தீர்மானிக்கப்படும்.

இந்த இரண்டு வாரத்திலும் பொது மக்கள் இந்த நுளம்பு உற்பத்தியாகின்ற இடங்களை சிரமதானத்தின் மூலம் சுத்திகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். – எனத் தெரிவித்துள்ளார்.






# பாடசாலையின் மைதானக் காணியை மீட்கக் கோரி

# கிண்ணியாவில் பாடசாலைச் சமூகம் ஆர்ப்பாட்டம்!

கிண்ணியா வலயத்திற்குற்பட்ட காக்காமுனை கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள அப்துல் ஹமீது வித்தியாலய பாடசாலையின் மைதானத்தை தனியார் ஒருவர் அபகரிக்கும் நோக்கில் சுற்று வேலி இட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இந்தக்காணியைப்பாடசாலைமைதானமாக கடந்த 20 வருட காலமாக பயன்படுத்தி வந்த நிலையில் தனியார் ஒருவர் அம்மைதானம் அவரது காணி என உரிமை கோரியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

தற்போது பாடசாலை அமைந்துள்ள காணியானது அப்துப் ஹமீது என்பவரினால் பாடசாலைக்கு என அன்பளிப்புச் செய்யப்பட்டதாகவும், 20 வருடங்களின் பின்னர் தற்போது அவரது மகன் ஒருவரே இவ்வாறு அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் மைதானம் தனக்குரிய காணி என உரிமை கோரி அதற்கான சுற்று வேலியையும் போட்டிருந்தார்.

இது தொடர்பில் பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்திய பொது மக்கள், அக்காணி அரச காணியாகவே இருந்ததாகவும், பின்னர் பாடசாலைக்கு மைதானம் ஒன்று தேவை என்ற வகையில் பற்றைக் காடாக இருந்த அவ்விடத்தைப் பொதுமக்கள் துப்பரவு செய்து 20 வருடகாலமாக மைதானமாக பயன்படுத்தி வருகின்றனர் எனவும் அறியப்படுத்தியிருந்தனர்.

அதன் பின்னர் அக்காணி அரச காணி என பிரதேச செயலாளரினால் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி அடையாளப்படுத்தப்பட்டது.

அரச காணியை மைதானத்திற்கே பெற்றுத்தரக் கோரியும், அரசியலை காணி அபகரிப்புச் செய்பவருக்கு சார்பாக பயன்படுத்துவதற்கு எதிராகவும் பொதுமக்களும் மாணவர்களும் சேர்ந்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த ஆர்ப்பாட்டத்தில்“அரச காணி அபகரிப்பை தடுத்து நிறுத்து!”, “பிரதேச செயலாளரே! அரச காணியை எமது மைதானத்துக்கே பெற்றுத்தா!”, “அரசியலை உள்ளே புகுத்தாதே!“, “எங்களின் விளையாட்டு நிலம்,எங்களின் விளையாட்டுக்கான வளம்” – போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் ஊர்வலமாகப் பாடசாலையிலிருந்து காக்காமுனைப் பிரதான வீதிச் சந்தி வரை நடைபவனியாகச் சென்று, பொதுமக்களால் தடைகள் போடப்பட்டு இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போக்குவரத்திற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் வேண்டுகோளிற்கு அமைய பிரதேச செயலாளர், கோட்டக்கல்வி அதிகாரியும் அங்கு வருகை தந்து பிரச்சினைக்கான தீர்வாக மைதானத்தினை அபகரிப்புச் செய்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளாதாகவும், மாணவர்களைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லுமாறும் குறிப்பிட்டு ஆர்ப்பாட்டத்தை முடிவுறுத்தி வைத்தனர்.





# பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட்: சம்பியனானது அக்கரைப்பற்று அஷ்ஷிராஜ்

(எஸ். சினீஸ் கான்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியிலே அக்கரைப் பற்று அஷ்ஷிராஜ் மகா வித்தியாலயம் சம்பிய னாகியுள்ளது.

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் நேற்று முன் தினம் (18) அநுராதபுரத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று அஷ்ஷிராஜ் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று தேசிய சம்பியனாகியுள்ளது.



# கல்குடா வளர்நிலா சிறுவர் கழகம் மாகாண மட்டத்துக்குத் தெரிவு!





(அ.அஸ்வர்)

கோறளைப்பற்று – வாழைச்சேனை கல்குடா "வளர்நிலா சிறுவர் கழகம்" மாவட்ட மட்டக் கிரிக்கெட் போட்டியில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது.

செரி நிறுவனத்தின் ஏற்பாட்டில் "விளையாட்டின் ஊடான அபிவிருத்தி" எனும் தொனிப்பொருளில் சிறுவர் களிடையே நல்லிணக்கத்தை ஏற் படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மாவட்ட மட்ட பெண்கள் கிரிக்கெட் போட்டி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் காத்தான்குடி, மண்முனை வடக்கு, ஏறாவூர்ப்பற்று, கோறளைப்பற்று ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட அணிகள் பங்குபற்றின. இதில் கோறளைப்பற்று வாழைச்சேனை கல்குடா "வளர்நிலா சிறுவர் கழகம்" முதலிடம் பெற்றது.

இறுதிப் போட்டியில் "வளர்நிலா சிறு வர் கழகம்" 53 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடி 4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி அபார வெற்றி பெற்றது. அதேவேளை, மாகாண மட்ட போட்டிக்கும் தெரிவாகியுள் ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.09.2023




இன்றைய நாள் சிறப்பாக இருக்கும் உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும். அதனால் நன்மை ஏற் படும்.

இன்று பரபரப்பாக காணப்படுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பூர்வீகச் சொத்து வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சமநோக்கு நாளாக அமையும். இன்று புதிய நண்பர்கள் மற்றும் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் பணிகளை தன்னம்பிக்கையுடன் மேற்கொள்வீர்கள் மற்றும் கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை அதிக வாய்ப்புகள் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும்.

இன்று ஆரோக்கியமாக இருப்பதற்கான வலிமை உங்களிடம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். இன்று எதிர்ப்படும் எந்தத் தடைகளையும் நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள். இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக நடக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக குறித்த நேரத்திற்கும் உங்கள் பணிகளை செய்து முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் இருவரும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான திறமை உங்களிடம் காணப்படும். உங்களிடம் காணப்படும் பணத்தை ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு செலவு செய்து திருப்தியடைவீர்கள்.




நீங்கள் இன்று கடைசி நிமிடத்தில் வாய்ப்பை இழப்பீர்கள். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமுடன் பணியாற்ற வேண்டியது அவசியம். இன்று ஓய்வின்றி பணிகள் செய்ய நேரும்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்ச்சிவயப்பட்ட மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். நட்பான அணுகு முறை மேற்கொள்வது நல்லது.

இன்று அதிக பணம் செலவு செய்வீர்கள். இன்று சுதந்திரமாக நிதியைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி அல்லது இருமல் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று நல்ல பலன்களைக் காண புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும். பிரிய மானவர்களுடன் மோதல்கள் ஏற்படாமல் இருக்க கவனமாக தொடர்பு கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் பணிகளில் வெற்றி கிடைப்பது அரிது. கடின உழைப்பின் மூலம் மட்டுமே இன்று நன்மை கிடைக்கும். உங்கள சமயோசித புத்தியை பயன் படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை கொள்வது நல்லது.உங்கள் சலிப்பு மனப்பான்மையை வெளிப்படுத்தாதீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும்.




இன்று உங்களுக்கு அதிர்ஷ்ட கரமான நாளாக அமையலாம். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதக மாக அமையும்.

இன்று உங்கள் பணியில் வெற்றி காண்பீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு பதவி உயர்வு தந்து பாராட்டுவார்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிபத்டுவீர்கள்.இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று கடின உழைப்பின் காரணமாக வெற்றி கிடைக் கும். இன்று ஊக்கத்தொகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. அதனால் மகிழ்ச்சியடைவீர்கள்.

திடமான மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் உணர்ச்சிவசப்படும் போக்கின் காரணமாக நீங்கள் சில சிறந்த வாய்ப்புகளை இழக்க நேரலாம். எனவே இன்று நீங்கள் சாதுர்யமாக செயல்பட வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடனான உறவுமுறை சிறப்பாக இருக்காது. மனப்போக்கை மாற்றினால் நல்ல உறவை வளர்க்க முடியும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண பிப்பீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்ள இதனை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி குறைவாக இருக்கும். ஆரோக் கியத்திற்கான கூடுதல் செலவுகள் காணப்படும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கால்கள் மற்றும் மூட்டுகளில் திடீரென்று வலிகள் ஏற்படலாம்.




எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் சிறப்பாக திட்டமிட வேண்டும்.ஒரு முடிவை எடுக்கும் முன் பாதகம் ஏற்படா மல் இருக்க ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும், பெரியவர்களின் ஆலோசனையை கேட்பது நல்லது.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடின மாக உணர்வீர்கள்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடத் தில் வெளிப்படுத்துவீர்கள். இருவரும் மகிழ்வுடன் இருக்க இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக் காது. தேவையற்ற கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

பல் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் -20.09.2023




இன்றைய நாள் சற்றே அனுகூலமாக இருக்கும். அதிர்ஷ்டத்தை விட சுய முயற்சியை சார்ந்திருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். ஓய்விற்கு நேரம் கிடைப்பது அரிதாக இருக்கும். நல்ல விளைவுகளைக் காண பணிகளை திட்டமிட வேண்டும்.

இன்று உங்களிடம் பதட்டமான உணர்வு காணப்படும். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். எனவே அமைதியான மன நிலை மேற்கொள்வது சிறந்தது.

குறைந்த அளவு பணமே காணப்படும். கூடுதல் செலவினங்கள் கவலையை அளிக்கும்.

இன்று அமைதியின்மை காணப்படும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். நீங்கள் இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

பணியில் உங்கள் முயற்சிக்கு பாராட்டைப் பெறுவீர்கள். உங்களுக்குள் இருக்கும் திறமை காரணமாக கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். நகைச்சுவை அணுகுமுறை உங்கள் உறவை வலுப்படுத்தும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை பெறுவீர்கள். புதிய முதலீடுகள் செய்வதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று மிகவும் அனுகூலமான நாள். உங்கள் மனம் அமைதியாக இருக்கும். விருப்பங்கள் நிறைவேறும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

பணியிடத்தில் சுமூகமான விளைவுகள் இருக்கும். உங்கள் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் உறவு திருப்திகரமாக இருக்கும். வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நல்லுறவை பராமரிக்க முடியும்.

தொழில் செய்பவர்கள் நல்ல லாபம் காண்பார்கள். நிறுவனத்திற்கு புதிய தொடர்பாளர்கள் கிடைத்து அவர்கள் மூலம் லாபம் கிடைக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று திட்டமிட வேண்டியது அவசியம். மனதில் சில குழப்பங்கள் ஏற்படலாம். குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். எந்த காரியத்தையும் செய்வதற்கு முன் யோசிக்க வேண்டும்.

பணியிடத்தில் அதிர்ஷ்டம் கை கொடுக்காது. நீங்கள் கடின உழைப்பை சார்ந்திருக்க வேண்டும். உங்கள் திறமையும் கவனிக்கப் படாமல் இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் கெடும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழப்பீர்கள். நிதியைப் பொருத்தவரை முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பணம் கிடைப்பது அரிதாக இருக்கும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park